பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்

இராஜபாளையம்டவுண்சம்மந்தபுரம்

மகா-ா-ா-ஸ்ரீ

நா,சையதுமஸ்ஹூதுராவுத்தர்

அவர்களால்

48

இயற்றிய

மும்மணி ரப்பதிகம்

——(o)——

ஷையூர்

மகா-ா-ா-ஸ்ரீ

சை-இபுராம்ஷா லெவை யவர்களின்

உதவியின்பேரில்

இராஜபாளையம்

சந்தரவிலாஸ அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

——[‡]——

1912

லை] [அணா 2

O7:417
N12
170613

பிஸ்மில்லாஹிற்றஹ்மா நிற்றஹீம்.

மும்மணியாரப்பதிகம்.

காஞ்சிபுரம்திருவருள் பிரகாசவள்ளலார் மரபு நிச்சலராமானந்தசுவாமி மாணாக்கருள் ஒருவராகிய சிதானந்ததேசிகரவர்களால் அருள் செய்த சாத்துக்கவி

தரணிபுகழரசநகர்உதித்தகோமான்சையது
மஸ்ஹூதுலெவ்வைத் தமிழ் நாவல்லோன்
பரமகுருவான முகம்மது குதாபுபதமளிக்கும் கடவுளருள்
பாதம் போற்றி
வரமருளுமூன்று மணியாரமொன்று வகுத்துரைத்தா
னிந்தயதிர்தோர் வான்பூமிக்குள்
திரமடைந்து மெஞ்ஞான செல்வராகி சிற்பரமசற்
தற்சொரூப செயலோவாரே.

ராஜபாளையம் மகா-ள-ள-ஸ்ரீ வெ. சுப்பராஜா அவர்கள் பாடியது.

விரிகடல்சூழுலகமதில்வேந்தர்பாளையமதனில்வித்வவல்லோன்
பரிமனதின்குலத்துதித்தாண்டவனருளாலிப்பாவலன்சொற்பதிகமெதிரே
சரிசொல்வதற்குவேறெப்பதிகமெனச்சாற்றினன்சையதுமசூதென்போன்
அரிபக்திதவறிலான்ராஜகுலசுப்பையராசகத்துசவியறைவித்தானே.

சிவகிரி மகா-ள-ள ஸ்ரீமகாலிங்கப்புலவரவர்கள் பாடியது.

மூன்றுமணியாரமெனும்நாவினியபொருளிரதமுதார்ச்சியாயென்
கான்றுமணியாரமுதாய்கற்றோர்கட்கணியணியாய்நவின்றான்கோட்டுத்
தேன்றுமணியாரவயல்சூழரசர்நகர்வாசன்மஸ்ஊதுசுமுகன்பாற்றேன்
போன்றுமணியாரமுதாய்செவியினித்கேட்போர்க்குப்புகலில்மன்றே.

எட்டிசேரி மகா-ள-ள ஸ்ரீ அருணாசலப்புலவரவர்கள் பாடியது.

கோகநகத்தடம்பொழில்சூழ்தென்னரசநகர் வாழ்சற்குணவானெங்கும்
மாகநகத்தர்சர்மெய்க்குமசையிது நன்னாவலவன்வழுத்துமிந்தப்
பாகநகத்தமுதமெனில்நாவினுக்கேயின்பமிதின்பயனையோர்ந்து
நாகநகமினிக்குமென்குவிதின்பயனைசொலப்பாற்றோநாவலீரே.

சம்மந்தபுரம் மகா-ா-ா-ஸ்ரீ முகியதின்பாக்ஷா ராவுத்தர் அவர்கள் பாடியது.

நற்கண்டு சர்க்கரை தெங்கு தேனபால்கிரு நறுநெய்யுங்கூடவாக
நற்கதலி மா பிலாவாகுடன்சேர்ந்தொரு நவரசப்பாகுபோன்ற
சொற்கண்டியாவருமின்புறுக மெஞ்ஞான சுருதியாயெந்தநாளுந்
தோத்திரஞ் செய்பவர்க்கருள்தரூமக்கனிரசூல்பேரர்பேரில்மேல
வற்கண்டுமெச்சிடும்பதிகம துவுலகிலேமகிழுநாகூறமீரான்
மைந்தன் நற்கவியாளன் மாண்பெரும்சையதுமஸ்ஹூதுல்ரையுநற்பா
விற்கண்டுகுறைசொல்லாரருமிப்பாரில்மெய்விளக்கு திருமணிமுன்றதாய்
விரிந்தாரமாயொலிதிரைசடலுமாகவே விளம்பினோர்மேலாகவே

ஸ்ரீவில்லிபுத்தூர் ம ா ா ஸ்ரீ உ. மீருஉசன் ராவுத்தரவாள்பாடியது.

அணங்திசளுர்தளமதைகருவெனக்கொண்டடைகாற்குமணியார்பண்ணை
வணங்திகளும்மடுக்களுஞ்சூழரசநகர்மஸ்ஹூதுவள்ளலானோன்
கனந்தலத்தில் கவிகையுறும் கபி பிரசூல் மருமூபு கருணையோனை
மணந்தலையிற்கொண்டுசொற்றுணிப்பதிகம்தனக்கிணையார்வழுத்தப்பாலசர்

சேத்தூர்சமஸ்தானவித்வான்ம-ா-ாஸ்ரீராமகிஷ்ண ஆசாரியவர்கள்பாடியது

செப்பதனைகிகர்தனத்தார்எழுதுமதன்சைதுதொழும்தெய்வமீதே
செப்புதமிழ் அமுதமும் பாலுங் கலந்தெனதித்தித்திடு [தோர்.
மூப்பதிகம்சொற்றனன்மற்றவர்பதிகம்முறைமுறையேமொத்தஞ்சேர்த்
மூப்பதுபதிகத்தைவைத்திருக்கினுமேஇவன்பதிகம்முருகுந்தானே,

பேரையூர் சமஸ்தானவித்வான்சின்னயபுரம் மகா ா ா ஸ்ரீ அப்பாவுக்கவிராயரவாகள் பாடியது.

துய்யதுவாச்செய்து துதித்து நபிதாள் மறவா
சையதுவாகாம னிசைத்தான் பதிகம்—மெய்யதுவே
யாருந்தனிப்பொருட்கும் அன்பருக்கும்அன்புகந்து
பாகின்சுவையையிகர்ப் ப.

ராஜபாளையம் ம ா ா ஸ்ரீ R. முத்தையபிள்ளையவர்கள் பாடியது

இரவிதவாரந்தனையே பிந்து குருவாரமெனயிசைத்துப்போரய்
வரிசைபெரும் அரசநகர் வணிகசந்தை தனையமைத்தமஸ்ஹூதென்போன்
பரிகமுறபாலர்களைகற்கவைத்தும் பத்தர்களைத் தொழச்செய்வித்தோன்
உரைமணியாம் திரிமணிக்கி உவமைசொல்லஎவராலுஒவ்வாதம்மா,

சிறப்புப்பாயிரம்.

—(0)—

ராஜபாளையம் மா ா ா ஸ்ரீசின்னகிஷ்ணய்யங்காரவர்களைப்பற்றியது.

பார்கொண்டவரசரில் சுவேதவர்கள் நாளினில் பாண்டிநன்னாடுதனிலே
பவிசுபெற்றிருநெல்வேலி ஜில்லாவிலே வளம்பகர்கின்ற வில்லிநகர்சார்
சார்கொண்டதிக்களுமுமமுறையதாகவேகால்கொண்டுபொழியுமாரி
சதிபொலிததும்புபூவகொடியினல்மதியினைகளங்கம்மோடவரிசை
சீர்கொண்டமாதெங்குகதலிமுக்கனிகளும்சிறைத்தொழுகுதேரலெல்லாம்
நிரைகொண்டுருநிகொண்டுநதியாகவே யோடிதிகள்வயலில் வந்துபாயும்
ஏர்கொண்டஅழகைநகர் வாழ்கின்ற சீலனும் இரவிகுல தர்மராஜன்
இன்பமுறுபாவலன் நாகூருமீருவு ஈன்றிடும் சையதென்போன்
வார்கொண்ட கொங்கையர்கள் மடலெழுதும்வடிவுடையமஹிபனும்
சையதிபுராம்
வரமதனில்வந்திடும்இபுராமுவேண்டலால்மாசிலாமுதலையவனும்
தார்கொண்ட அல்லா இரசூல் முஹய்யதீன்தானெனும் மூன்றுமணியாய்
தாணிதனிலவர்களின் பெருமை தனையாவையும தானறிந்தளவதாக
நீர்கொண்டசௌமியவருடமதுதன்னிலே கிரையயனதட்சணத்தில்
நேரானரவிதுலாமாசமதுதன்னிலே நிறைந்தமதிபக்கமதிலே
பேர்கொண்டதேதியோ பத்தினொடு எட்டிலே பெரியமதிவாரமதிலே
பிரியமாய்இச்சரிதை பாடினன் அஃதினைப்பேறுவீர் புலவீர்களே

பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றஹீம் வசனம்.

——‖————[0]————‖——

கடல்சூழ்ந்த பூவுலகின்கண் என்னாட்டினும் மேலுற்றோங்கிய இந்தியதேச பாண்டியநாட்டுள் இராஜபாளையம் சரகம் சம்மந்தபுரம் நகரில் நாகூர்மீரா ராவுத்தரவர்கள் குமாரர் சையதுமஸ்ஹூது என்று பேருடைய நான் சில வருஷங்களாக பாவரும் தேவதோத்திரம் செய்ய உதவியான நல்ல செந்தமிழ் பாக்கள் சொல்ல வேண்டுமென்கிற பக்தி ஆவல் என்னைத்தூண்டினபடியாலும் அனேகர் வேண்டினபடியாலும சாவஜீவதயாபரசாக்ஷாத் பரம்பொருளான அல்லா சுபுஹானஹுவதாலாவின் பேரினும் பூலோகத்தில் லௌகிக புருஷராக அவதரித்து

தெய்வத்தன்மையான அனேக அற்புதங்களைக் காட்டி இஸ்லாம் மதத்தைப் பிரபலிக்கச்செய்து யாவர்களையும் நற்கெதியடையும்படிசெய்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் பேரிலும் இஸ்லாமதத்திற்கு சுயஸ்தம்பமாயும் வைதீக குரு மகிமையுடையவராயும் சன்மார்க்கவழிகாட்டும் சுரூபஞானியாகவும் பூலோகத்தில் அவதரித்த குதுபுநாயகமாகிய முகையதீன் அப்துல்காதிர் தஸ்தஹீர் பேரிலும் பாடியதால் மும்மணிப்பதிகமென்று பேர் தரித்து என் சிற்றறிவிற்கு எட்டியவாறு தல மகிமை நீதி தோத்திரம் பலன் முதலியதுகளை அமைத்து என்னால் பாடப்பெற்று ஷை யூர் மகா ள ள ஸ்ரீ சையதிபுராம் லெவ்வை அவர்கள் குமாரர் இபுராம்ஷாலெவ்வை அவர்கள் பொருளுதவியின் பேரில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறபடியால் சர்வவிவேகிகளும் இந்தத் தோத்திரம் பக்த விஷயமானபடியால்,

"பக்தர் சொன்னவும் பாமரர் சொன்னவும் பித்தர் சொன்னவும் பேதமையல்லவே' என்கிற வாக்கியப்பிரகாரம் இதிலிருக்கிற குற்றத்தை கருதாமல் குணத்தையே கருதி இத்தோத்திரப்பாவை அங்கீகரித்து ஆசீர்வதிக்கக்கேட்டுக் கொள்கிறேன்.

காப்பு விருத்தம்.

ஆதியாய கண்டமாகி அளவிடற்கரிதுமாகி
சோதியாய் எங்குந்தானாய் சுத்தநிர்க் குணமுமாகி
ஓதுநல்வேதத்துற்ற உத்தமனாகினின்ற
நீதனேஉனைத்துதிக்க நித்தநீ துணைச்செய்வாயே.

ரசூல்நாயகத்தின் துதிவிருத்தம்.

கல்புக்கினியகனிரசமேகனிந்தேயொழுகுந்தேன்பாகே
வில்லில்புருவத்திடைநடுவில் மீதேவிளங்குமிரசூலே [நற்
செல்வப்பொருளும்பேரறிவும்ஜெகத்தின்வாழ்வுஞ்செழித்திடு
கல்விப்பொருளுமெனக்கீய்ந்துகடவுட்பதிகம்சொலவருள்வீர்

குதுபுநாயகத்தின் துதி வேறு

——[§]——

தென்னைபுங்கதலிசெழிப்புருவயல்கள்செறிபகுதாதுநன்னகர்க்கு
மன்னரேஉமதுதிருவடிக்கமலமலரிணைசென்னிமேல்கொண்டு
முன்னதாயுள்ளசுத்தசைதன்யமூலமாய்நிரஞ்சனமான
அன்னவன்மீதுகவிசொல எனக்குஅருள்தருவீர் கவுதொலியே

அவையடக்கம்வெண்செந்துறை

——o——[(‡)]——o——

1. திருவருளாதநபியின் சேயிபுரும் கோத்திரத்தில்,
மருமலர்கமழுமக்க மகமதியாதீன் கிளையில்

2. யோகவப்துல்லா மரபிலோண் சுடராய் வந்துதித்த
ஷேகுபரீதொலியின் சீரோமகும்லப்மிசத்தில்

3. மாராஜபாளயத்துமானகர் சம்மந்தபுரம்
பீர்முகம்மதெனனும் பிரபலவானீன்றெடுத்த

4. சந்தம்பெருகும் சலபாத்துபகாரன்
கந்தம் பரிமளிக்கும் கஸ்தூரி வர்த்தகர்தான்

5. நாகூர்மீராஜேந்திரன் நற்புராக்குபொற்புருசு
வாகூர்முதல்வர்மலர்ப்பாதம் போற்றிசெய்வோன்

6. பன்னுதமிழ்தேர்ந்த பாவாணர்க்கன்புடையோன்
என்னும் சையதுமஸ்கூ தெத்தமிழும் தேர்ந்தறியேன்

7. இம்மைமறுமையிரண்டிலுமே எந்தனுக்கு
நன்மை உதவுமென்று நானுமிதைப் பாடுகின்றேன்

8. எப்புவியோர்போற்றும்இறைவரொருமூவர்மிசை
முப்பதிகங்காதல் மொழி மாலை கூறுகின்றேன்

9. வாணர் பெரியோர்கள் மாதவத்தோர் முன்பாக
கோணுதலில்லாதுகவிகூறற் கிசைந்ததை

10. ஆனைபெதிர் புல்லியதோ ரரவெதிர்ந்து வந்தது போல்
பூனை யெதிர்ந்து புலிக்கெதிரே நின்றதுபோல்

11. அம்பரத்திலே வசிக்கும் அம்புலிக்கு நேராக
யிம்பருலகினிடைக்கிழிஞ்சிமின்னுதல்போல்

12. வைகைக்கிணை யென்று சிறுவாய்க்கால் வருவது போல்
பொய்கைக்கெதிரென்று புல்பனிநீர் தோன்றுதல்போல்

13. செய்யுள்முறைதெரியேன் செப்புதற்கு நாதழுற்றேன்
வையகத்தோரெல்லாம் மகிழ்ந்து துவா செய்வீரே

14. மதலைமொழியை மகிழ் மாதாவைப் போல
குதலைமொழியென் கவியும் கொள்வாரே கற்றோர்கள்

15. அல்லாஹ் நபிகுதுபென்றம்புவிமேல் பேர்படைத்த
வல்லார்புகழதனை வல்லாரும் கொள்வாரே.

முகவுரைப்பாயிரம் வெண்செந்துறை.

———ο———[(ο)]———ο———

1 சீர்மாதவமோங்குஞ் செல்வமிகப் பெருகும்
பாரிந்து தேசமதில் பாண்டிவளநன்னாட்டில்

2. காதம்பரிமளிக்கும் கஸ்தூரி கன்னபியின்
வேதம்படர்வது போல் வெண்முகிலினம் படர்ந்து

3. நீலக்கருங்கடலில் நீர்பருகி விண்ணூர்ந்து
சீலப்புனல் சொரியும் செம்மயிலாடுங்கிரியில்

4. மாதந்தோறுமூன்று மழைபெய்திந்து மாவினங்கள்
தாதருந்துஞ் சோலை நவரத்தினங்களும் விளையும்

5. நன்னகைகளெட்டும் நதிநதமுநதானா சூழ
உன்னதமதான வுபர்வேயின் பந்திகளும்

6. சந்தமகில் தேவதாரத்தருக்களுமே
கொந்தலர்ந்த செண்பகப்பூ குங்குமப்பூஞ் சோலைகளும்

7. ஏலமிலவங்கம் இலுமிச்சை நார்த்தை முதல்
கோலமுனமஞ்சளிஞ்சி கோஷ்டம் பூலாங்கிழங்கும்

8. சாதிக்காய் ரோப்புபத்திரி தான்றிமாசக்காயும்
நீதி அதி விடயம் நிறைந்தவக்ராகாரமுடன்

9. கோங்குநாங்கு தேக்கு கூந்தப்பனைமயிலை
வேங்கைதந்தப்பாலை வெப்பாலைவேணதுவும்

10. மதக்கோட்டு வாரணமும் மானுமறையுங் கானகத்தில்
அதட்டுங் கரடி புலி அமருகின்ற மான் மரமும்

11. தோகைமயிலாடிவருங் கூந்தற்பேடோடிவரும்
வாகு புட்கள் பாடிவரும் மாங்குயில்கள் கூவுமலை

12. கலைக்கோட்டிலுற்பவித்த கன்னியெனும் ஞானகன்னி
தலைக்கோட்டுடையார் தனிப்பண்ணையில் வளர்ந்து

13. வேடர்குறிஞ்சி கடந்துமேவுதொட்டியிற் புரண்டும்
வாடாங்குவன்மனத்தார் வாட்பாலையிற்றவழ்ந்து

14. ஆனந்தமான சிங்கி ஆயர்முல்லையுட்புகுந்துந்
தானந்தமானகுடந்தாண்டிதனைக்கடந்து

15. கோதற்றதன்பால் குணபூஷணியணிந்து
தானாகதிசார்ந்துதனிலைப்புல வழியாய்

16. பூரணகுமிழ்தனத்தி பொற்கொடியகட்டழகி
நீரணியாய்த்தோன்றும நிலையறிந்து காற்பதற்கு

17. சேலைவிழிமின்னாளும் செங்கைவளைவிசிவர
வர்லவயதுப்பருவமங்கைவரவுகண்டு

18. வாரணிந்த கொங்கைமின்னைமருதப்பிரதாவாதரித்து
ஆரணாநதிவளந்தமதிற் கானவதுவை கூட்ட

19. சுயவரமதாயிருக்கும் தோரணஸதம்பம் நாட்டி
நயமாமதகுமடைநகமணமுரசொலிக்க

20. வையகத்திலே சிறந்த மகபதியதாயிருக்கும்
செப்தவிவேகனுக்கும் நேரிழைக்கு மணமிட்டான்

21. வேகமெனும் ராஜாவும் வேதாந்தப் பெண்ணரசும்
போகவிடாய் தீர்ந்து புத்திரரைப்பெற்றெடுத்தார்

22. போதமெனுங்கன்னல் செந்நெல்புந்தியெனும்பூங்கதலி
காதமெனும் பூகம் நற்றெங்குமா பிலாவும்

23. நாவல் விளா நெல்லி நற்சீமைத்தக்காளி
மேவிலவம் வில்வ மிலாமிச்சையானதுவும்

24. மாதுவளைபேரீந்துமா விலந்தை முந்திரிகை
சாதிவாழை கல்கதலிதக்கரசதாளியுமே

25. கொன்னைபுன்னைபம்பிசிரியாக்கொய்யாவாரஞ்சியனு
சின்னிலத்திலுள்ள பொருள் இன்னமனந்தமுண்டு

26. முல்லைசந்தானம் முழுப்பாரிசாதமுதல்
வில்லைரோஜா மலரும் வெண்ணிறத்துராஜமல்லி

27. மந்தாரம் பிச்சி இருவாச்சி மனோரஞ்சிதஞ்சூழ்
நந்தவனங்களுமே நாற்றிசையுமே மலியும்

28. ஏரிகுளங்கழனி எங்கு நிறைந்திருக்கும்
நாரியர் ஜலக்ரீடை நறுமலர் சூழ்வாவிகளும்

29. பூரணமதாய் நிறைந்து பொங்கியலைமோதி
வாரியெனநாளும்மருதமதில் வாழ்ந்திடுமே

30. கந்தரங்குடையிடுகபீரனுல்தீன் தழைக்க
இந்துதேசந்தனிலேயியல் பாண்டிராஜ்ஜியத்தில்

31. திருவளருநெல்வேலி ஜில்லாவிலே பொருந்தும்
தருவளரு வில்லிபுத்தூர் தாலூகாவைச்சார்ந்த

32. பந்துநாகத்தொடியோன் பாண்டிவளநாடன்
முந்தி அரசாண்டமுடியழகைமாநகரம்

33. எப்போது ராஜநகர் என்று பேர்பெற்றிலங்கும்
ஒப்புவமையில்லாதஓங்குவளநகரம்

34. சத்திரமுஞ்சாவடியும் தங்குமடஞ்சாலைகளும்
எத்திசையிலுமிதற்கு இணையில்லை என்றதுவே

35. நிலவளங்களும்சிறந்து நீர்வளங்களும்சுரந்து
மலைவளங்களும் பொருந்திவாழுமிஸ்லாநகரம்

36. செந்தாமரைத்தடஞ்சூழ் செந்திரு சம்மந்தபுரம்
அந்தணர்களும் வேதவாகமங்களோதுநகர்

37. மேடை உப்பரிக்கைகளும் வீதிகளுமேயிலங்கும்
மாடகூடந்துலங்கும் மாமணி மஜீதுகளும்

38. வேதக்கொடிதுலங்கும்மிக்ககோஷ்டமுளங்கும்
காதாக்களுக்குரிய நான் மறையுமே முளங்கும்

39. சந்ததமுஞ்சலவாத்தும் தஸ்தஹீர் மவுலூதும்
எந்தவேளைதனிலுமயாரும்பயில் நகரம்

40. சொந்தமதாம் பொற்கானின் சுருதியின்கல்விதனை
எந்தவீதிதனிலும் இளையோர் பயில் நகரம்

41. இன்னகரந்தன்னில் இல்லாந்தனைத்தோங்கி
பொன்விலங்குகின்றபுதுமையைநானென்னசொல்வேன்

42. ஆரணங்களோதுகின்ற ஆலிம உலமாக்கள்முன்பும்
காரணங்கள் காட்டுகின்ற காமில்களின்முன்பாக

43. சொன்ன முன்னசாலிகின்கள்சுந்தரப்புலவர்முன்பும்
முன்னவனிரசூல்ஹக்குமுவர்பகிருமுரைப்பேன்

44. ஆயிரத்தியெண்பத்து அப்பாண்டு சவ்வாலாம்சவத்தில்
பாயிரத்தினொடு பதிகம் பகருகின்றேன்

45. சீரான மன்னகரச் செல்வி சம்மந்தபுரம்
பாரில்தலமகிமை பக்தியுடன் கூறுகின்றேன்

46. ஆதிமிகராவும் அருந்தவங்கள் செய்யுகின்ற
ஜோதிவாசப்பிரகாசம தோற்றுமஸ்தமண்டபங்கள்

47. தக்குவாச்செய்பவர்க்கு தாராதரங்களாயமைந்த
திக்கிர்ரகசியமாய் செப்புமணிமண்டபங்கள்

48. சலவாத்துமவுலூதும் சார்ந்திருந்துவோதுதற்கு
நிலாமணியாய்த்தோற்றுமநீண்டமகாமண்டபங்கள்

49. ஓங்குகின்றவுப்பரிக்கை உன்னதமதாய்வளர்ந்த
வாங்குமனாராவும் வரிசைசதுர்க்கைகளும்

50. பஞ்சவர்ணகுளோப்புகளும்பாங்கானவால்சேட்டும்
மிஞ்சுகசாலஸ்தர்களும் மேலான ஊதுபத்தி

51. காபக்தெளித்திருக்கும் கமகமெனுஞ் சாம்பிராணி
வளம்பெருகும் புஷ்பப்பந்தல் வாகாயலங்கரிப்பும்

52. திருமதிலினழகும் தேசுகொடியின் தொனியும்
வருநகராவின் முழக்க மலியுங்கி[illegible]ன்னும்

53. பூரணானந்தான் றெழுத புண்ணியங்கள் செய்பவற்கு
வாரணம்போல்வாழி வளம்பொருந்துமித்தலமே

54. மூமின் முசலீனங்கள் முக்கியமாய் வந்து வந்து
ஆமீன்மிகக்கூறிஅடிபணியுமித்தலமே

55. காமக்கடலைக்கடந்து கல்புக்கடலைத்துறந்தோர்
நேமநிஷ்டைஎல்லாம் நிறைவேறுமித்தலமே

56. விண்டலத்தமரர்களும் வேதமொழியொலிகள்
மண்டலத்தில்வந்துவணங்குமகாதலமே

57. இந்தத்தலந்தனிலே இறை இரசூல் மஹாபூபு
சந்ததமும் நீங்காசலாமத்தருளுகவே.

இலாஹீ

நான் முகம்

கடவுள் பதிகம்.

கலித்துறை.

அஞ்செழுத்தாய அல்அம்து வென்றேத்துமரும் பொருளாம்
செஞ்சொலின் முன்னெழுத்தின் பொருளாய்நின்ற தேசிகனே
அஞ்சலிசெய்தனன் நின்னருள் வேண்டியனுதினமும்
தஞ்சமெனக்கருள்வாய் சர்வசீவதயாபரனே. (௧)

நயமாகுமஞ்சக்கரமதனுஹு நனுருதிரி
சியமாம் விகாரவைம் பூதமதாகச் செனித்ததிலே
சுயரூபமானபரவெளியாய் நின்ற சூக்குமமே
தயவாகவே யெனையாள் சர்வசீவதயாபரனே. (௨)

பஞ்சப்புலன்களையஞ் செழுத்தாலும் படைத்தடியார்
நெஞ்சகந்தன்னிலகலாதிருக்கின்ற நீளறிவே
கஞ்சத்திருப்பதமேவுங்கரீபி ரசூற்கருள்வோய்
சஞ்சலமேதவிர்த்தாள் சர்வசீவதயாபரனே. (௩)

ஆட்டக்கிருதியவச்சரமாகி யோரைம் பொறியின்
நா டத்திடை நடுமேலாக நிற்கு நவமணியே
தோட்டிணையான நபி நால்வர்தோன்றிச் சுகம்பெறநின்
றாட்டிணை தந்தருள்வாய் சர்வசிவதயாபரனே (௪)

அண்டபிண்டங்களும் பஞ்சகர்த்தாக்களுமஞ்செழுத்து
மெண்டிசையோர்களும் போற்றித்துதிக்கு மிறையவனே
தொண்டனெனக்காலுஞ் செய்பாவமியாவுந் தொடைத்தினிய
தண்டமிழ்க்கேயருள்வாய் சர்வசிவதயாபரனே. (௫)

அகதேபஞ்சக்கலியா முதலானவரும் பொருளே
யுகதேயெவற்று முடலுயிராகியுள்ளும புறப்புஞ்
சுகயாதிதுக்கமிரணடுந் தவிர்த்த சுடரொளியே
சகமே பரவவளர் சர்வசிவதயாபரனே. (௬)

ஆயுஞ்சுருதியிலோர்தெழுத்தாகிய வைந்தொருத்தே
தா யெனவுரைக்கு முதலெழுத்தே பசுத்தாபரமே
காயுமகசரிற் காயாமலே நின் கருணையினாற்
சாயுச்சியந்தருவாய் சர்வசிவதயாபரனே. (௭)

ஒருசதுமெய்த்தசத்தொன்றுநிற்கின்றவோரெழுத்தே
அருநற்சதுரெட்டறமாவிளங்கிய வற்புதமே
இருசதுவொன்றிய வின்பப்ரதேள சென்றியம் புகின்ற
தருசாத்துகந்தருளே சர்வசிவதயாபரனே. (௮)

காயாபுரியெழுத்தையாறின் முன்னின்ற கர்த்தனுமாம்
தூயாசதுர் மறையோயாதுவாத சத்துட்பொருளே
சேயாமெண்ணமபிர்ப் பாலங்கிடக்கின்ற தீ நதியிற்
றுயாய்க்கடத்திவைப்பாய் சர்வசிவதயாபரனே. (௯)

மெய்யென்றவைம்பத்தோரக்கரந்தன்னிலுமேலெழுத்தே
யுய்யுஞ்சராசரமுங்கூருபாவென் றுரைபொருளே
வையகமீதினிலெல்லாப்பவுசு மகிழ்ந்தருளிச்
சையது காசனையாள் சர்வசிவதயாபரனே. (௰)

றெசூல் நாயகத்தின் பதிகம் காப்பு.

பூரணப்பொருளாய் நீங்கள் பொன்னுலகதனிற் சேர்க்க
காரணக்கடலாய் வந்த ஹபீ பறசூல் மேல்பாட
ஆரணப்பொருளாய் நின்ற ஆதியே அளவிலானை
தாரணிதனிலும் வானத்தலத்திலும் காப்பு நீயே.

பதிகம் விருத்தம்.

மன்பெரும்புவியுங்ககனமற்றெவையும்வகுத்துமுன்வாசிலாம் சுடராய்
இன்பமதாகப் பின்புருக்கொண்டே யீரைந்துகாரணத்துடனே
வண்புடைத்தெம்முனமகிபதிமெச்சமதிவரவழைத்திடுங்கோவே.
அன்பனுக்குகந்து நம்பதந்தருவீர் அகமதே பரமசற்குருவே (௧)

அடிமுடிநடுவிலாதவன் கிருபையாலருள்கிந்திலுமாகி
படியினிற்புகழ்சேரப்தல்லா மகவாய்ப்பதந்தருமுகமதுநபியே
வடிதருமமுதனுசிந்தியமானின் வருத்தமுமகற்றிய முதல்ல
படியனுக்குகந்து நம்பதந்தருவீர் அகமதேபரமசற்குருவே. (

மன்னியமணிமுத்தாகிய பின்னர்மயிலெனவுருவமைந்தன்னுட
டன்னிகரில்லான்சமுகத்திலிருந்து தரணியிற்றோன்றியபின்னர்
தன்னியதசையைந் தொடிக்காக்கனியாய்த் தோன்றிடசெய்தருள்சுரக்த
அன்னையேபயனையீரடியனுக்கருள்வீரகமதேபரமசற்குருவே. (

வரம்பெறுசிறைபார்சிபுரெயுறபக்குமகிழ்வுறக்குதுபெனுந்தாரா
தரம்பெறகாட்டித்தருக்கெலாமகற்றிதரணியிற்பலபுதுமைகளூர்
திரம்பெறநடக்கும்படிக்கருள்புரிந்தசெழுமணிதீபமேயருள்வீர்
அருளடையனத்தமினர் மகவேயகமதே பரமசற்குருவே. (௪)

மன்னவர்தமக்கு மன்னராயுதித்து மகிதலத்துலவு நீன்றவசந்
தன்னையேநாட்டிச்சகலருந் தமதுதாளிணைதொழுதிடப்புரந்து
பொன்னுலகாளு புராதனமணியேபுகழுறுபுண்ணியபொருப்பை
யன்னமெய்பொருளேயடியனுக்கருள்வீரகமதேபரமசற்குருவே

புலியையகற்றிச்சீர் பொருப்பினில்வருத்தி பொன்றிடு சேய்க்குயிர் பொருத்தி
கலியினால்வருந்துன்படைந்திடுங்காலங்காரமெடுத்திரையையுண்ணிமத்தி
கலிவெனுஞ்சமமிலையெனப்பறக்கார்பெறுந்தயாளைதக்களேந்திர்
அலிமதித்திருமாதுலரானவர்தவகமதே பரமசற்குருவே. ([illegible])

என்றனையன்பனாகவேநினைத்தேளப்பிழைசெயினும்பொருத்தே
கன்றினிற்குருக்கையிலே போலிரங்கி கடைக்கணித்தருள் புரிந்திடுவீர்
பொன்றிடாபுகழ்சேரடியவர் தமக்குப்போதமேபுரிந்திடுமுதலே
அன்றிரவினில்விண்புகுந்திவண்மீண்டவகமதேபரமசற்குருவே

சிற்பொருளாகி செகதலத்துதித்த சேதனு சேதனத்துறைந்து
நற்பொருட்பெரியோர்நிதையத்துளாகி நாட்டத்தின்படியெலாநடத்து
முற்பொருட்சேத முகமதேயமுதேமுத்திருவித்தெனமுழைத்த
வற்புதக்கொழுந்தே சற்குணக்கடலேயகமதே பரமசற்குருவே.

வடிவமுங்குணமு மகிமையும்வளர்ந்த மக்கமாநகர்பெருவாழ்வே
கொடியனுர்லிவாவுல்லுரந்தன்னிழலிற்குலவுறும்படிக்கருள்புரியும்
கடிமலர்செழுங்குங்குமப்புயக்குனறேகாமாநப்பவனிசெலிக்க
அடியனேன்றனக்கின்னருள்சுரந்தருள்வீரகமதேபரமசற்குருவே

இத்தலந்தனிலேளவரேவரிடத்துமியல்புறநல்வழியொழுநம்
சுத்தநித்தியமாத்தன்னிலைபுணர்ந்ததுறசினருறவினைத்தொடர்ந்து
சத்தியமார்க்கந்தன்னிலேநடக்கசையது கசனுக்குருளும்
அத்தனுக்குரியபந்தராய்வந்தவகமதே பரமசற்குருவே (ய)

றசூல்நாயகத்தின் காதல்

காப்பு வெண்செந்துறை

———[*]———

1. சீர்மேவுமக்கபுரிச்செல்வரெனப்பார் புகழும்
ஏர்மேவுமெங்களிறைநபிமேற்காதல்சொல

2. மோக்கபுரிமேவுமுதல்வனுயரைக்கெழுத்தால்
ஆக்கப்புகழ்படைத்த ஆதிரகுமான் றுணையே

3. வேதமுதலாய் விளங்குமுதல் வடிவாம்
ஆதவியினடிமலரைப்போற்றி செய்வாம்

4. நீற்றுநெருப்பினிடை நின்றுவிளையாடிவரும்
போற்றுமிபுறாக் நபி பொற்பதமுங் காப்பாமே.

5. பன்னுக்கடவுள் பலிக்காப்பிதாவழிய
வின்னற்படாத விசுமாகிருட்டுணையே.

6. தன்மந்திரியாமற் சாற்றும புபக்கரெனும்
நன்மந்திரியனா நாதர் பதம் பணிவாம்

7. சூற்றப்புரிந்த குலமாகவைக்கொன்று நெறி
ஊற்றங்கிசைகூர் உமருகர்த்தாவைத்துதிப்பாம்

8. வேதமெலாமொன்றாய் விளங்கத்தொகுத்தவரென்
றோதுதுமானுநபைப சரணந்துணையே.

9. வலிபார் நபியார் மருகரிவரென்ற
அலியார் பதத்தை அநுதினமும் சிந்தைசெய்வாம்.

10. வைத்தபுகழ் பாத்தி முத்துமங்கையாரீன்றவருள்
மொய்த்தபருதாது முகையதீன் காப்பாமே.

11. .பாகூருஞ்சொல்லார் பருகிதட்டேனுண்ணுத
நாகூர்மீறுவொலியின் நன் மலர்த்தாள் காப்பாமே.

12. சேகுதுமானுக்கு திருவருள் முன்செய்த சைய்ப
தாருமகாகூருபதந்தயபுயமும் காப்பாமே.

காதல்.

†o†

13. மருவிமுகில் சொரியுவான் மணியைவாரி
அருவிகொளிக்கு மடபாத்து மாதவமே.

14. தெள்ளுமீனிக்குலத்தைத் தெண்டிரைக்கையாலெடுத்து
வள்ளலெனவீசு கன்னமா நதிசேர்வாருதியே

15. வன்னங்குலவும் மலர்ப்பூந்தடங்கடொறும்
அன்னங்குலவுமரபுவளநாட்டரசே

16. சித்திபுரிநூதுஜிபுரையில் வந்தோதுகின்ற
முத்திபுரியென்றுரைக்கும் மக்கபுரி மாமணியே.

17. அஞ்சலர்கள் சென்னியணிமுடிமேற்றுவிவரும்
பஞ்சகவுனம் படைத்தயஞ்ச கல்யாணித்துரையே.

18. பாரமுபர்வெள்ளி பருப்பதம் போலே விளங்கும்
வீரமுபர்வெள்ளைவேளத்ததிபதியே.

19. எங்கும் பரிமளிக்கும் என்றும் மணங்குன்றாத
குங்குமப்பூமாலை குலவுபுபகோமளமே.

20. கல்லாபுபத்து நகராவினுலகில்
எல்லவருங்கூட்டி இறைஞ்சுந்தயாநிதியே.

21. நீதம்கலாதபுகழ் நீ நிலமெலாங்கார்க்கும்
வேதஅல்அம்தென்னவிளங்குதுவசத்தமுதே.

22. பொல்லாவழியில் புகுதவொட்டாமற் றடுத்து
அல்லாவழியி லடக்கி வருவற்புதமே.

23. மண்டலமெலாஞ் செழிக்கமாதம் மழை மூன்று பொழி
கொண்டலெனுமாமதலவுகவிகைக்குருசே.

24. முன்னாலு மந்திரிமார் மொய்த்த மனுநீதிசொல
பன்னுலுலகம் பரவும்பதாம்புயரே.

25. ஓராயிரந்தலைப்பாம்புள் ளெளியதாக்கெழுபத்
தீராயிரந்தலைவர் இலங்குகின்ற நாயகமே.

26. அல்லாவைப்போற்றி அனவரதமும் கருப
துல்லாவிருந்து உவந்து தொழும் உத்தமரே,

27 ஜோதிமயமே துலங்குமப்துல்லா மகவாய்
மாதாமினார் வயிற்றில் வந்துதித்தபாலகரே.

28. அலிமாவமுதமமரர்தொழுதேத்துமுந்தி
கலிமாவமுதங்கலந்திருந்தவாய்முநலே.

29. சித்தனாதி நிமலனார் தாதரெனும்
முத்தனார்வைத்த நெஞ்சமுத்திரியைப்பெற்றவரே.

30. எல்லிலிருள் சூழவிலங்குபதியிற்றோன்ற
சொல்லில் வழுவாதழைத்த துத்தியஞ் சேருத்தமரே.

17043

32. வேடன்வலையினிடை வீழ்ந்தபிணைக்குப்பிணையாய்
வாடுகன்றுக்குப்பால் மகிழ்ந்தூட்டும் வல்லவரே.

33. அரசுசிரசதுவாய் அரமகியுந்தோக்குறுதல்
குருசுபுருவமையம் கோட்டுவில் போல் புருவம்

34. எத்திசையுந் தோற்றுமியல்பானமை விழியின்
மத்திநடு நாயகமாய் மன்னுகுமிழுன்னதமாய்

35. சித்ரத்துரு முன்னறியும் செவியுங்கன்னப்பரிசம்
முத்துநகையுமுருக்கம்பூப்போலிதழும்

36, தாமரைப்பூப்போல் முகமும் சந்திரனைப் போலொளிவும்
மாமதுரவாக்கும் வாழ்கருணையானனுக்கும்.

37. மல்லுலவுவாகும் வரை போலகல் மார்பும்
கொல்லுலைவாளாயுதத்தை கொண்டு நீண்டகரமும்

38. கஞ்சமலர்போல்பாதம் காசினியில் தோயாத
விஞ்சியகஸ்தூரிகமழ்மேனி நிறங்கனகம்.

39. ஜலதரத்தின்வான் குடையாம் சாய்கைநிழலில்லாத
மலஜல நோய் தோன்றாதவானோர் பிறவியநாம

40. அரிகிரியைதமனியத்தை ஆனவேயைத்தனைவ்
சரியாகவே யுரைத்தால் தகுமானகாரியமோ.

41. வணக்குங்குமப்புயத்தார் மாமதிலைபத்தானிகழ்ந்த
தனக்குத்தானே பிணையாத்தானவரா வந்துதித்தீர்

42. வேதாபிமாருமிக்க அமரர்களும்
தூதாவந்துரைத்த சொற்பிரகாரப்படியே

43. ஈசானபிவேதம் எனக்குப்பின்னால் வருவோர்
கூசாமல் வேணாமல் கொள்வாரதிகாரி

44. கேசாதிபாதம் கெணிக்கமுடியாது சொர்க்க
ஆசனத்துக் காதாரம் அகமதரென்றேயுரைக்கும்

45. என்றுமுரைத்ததுபோல் எவ்வுலகினுக்குமொரு
வென்றிகொழுமிசாய் மேம்பாடுடையவராய்.

46. போதஞானமறிவும் பூரணசந்திரோதயமாய்
நீதமுருமானபியாய் நீணிலத்தில் வந்துதித்தீர்.

47. வருசை பெருமாந்தர்களை வான்பதியில் சேர்ப்பதற்கு
புருஷர் களிலுத்தமராய் போந்தமுகம்மதுவே

48. மேலா சருபந்தும் மிக்கவஸ்திராதிபராய்
மாலா மறையிலுக்கு நாயக முகம்மதுவே

49. நரபதியதாக வந்து நானிலத்தோர் தங்களுக்கு
வரபதியுமாகி மக்க புரபதியாம்

50. கார்பதிய தாயிருந்து சுவனலோகந்தனிலும்
பாகதியில் சேர்த்துவைக்கும் பஞ்சாட்சரப்பொருளே

51. ஜோதியயத்தின் குணமே சொர்க்கந்தனில் சேர்க்கும்
நீதியுயிர் காருண்யமும் செவ்வையுறுங்காரணமும்

52. உடல்வடிவமாயிருந்து துன்யாவில் வந்துதித்து
நடஞ்சூழ் புவிதனிலே தற்காக்குந்தாட்டிகரே

53. புரிசைசூழ் மக்கமதில் புவியரசர்தான் போற்ற
புருஷாகமில் மேருவென்று போற்றுமுகம்மதுவே

54. அடுத்தோர்க்கு தீபமருளொளியைத்தந்திடல் போல்
படித்தலத்திரட்சகராய் பாதுகார்க்குங்குணத்தீர்

55. சல்லியத்தைவென்று தடங்களிற்றைக்கொன்றுதிரி
வல்லியமுங்கானில் வசனிக்கும் வல்லவரே

56. நனிதொழுது வாழ்த்திநபி நீரென்றேத்தி
தனிவனத்தில் பாந்தமெழுதிர் தான்பேசுங்காரணரே

57. இடும்பைப்பிணிக்கு மருந்தென்று அரபிசொல
உடும்பைக்கலிமாவை ஓதவைத்த ஒஸ்தாதே

58. கள்ளரை ஆறேகடுக்கக் கண்டவணிகக்குலத்தோர்
உள்ளமகிழ்ந்தேற்று ஒளிவுருவாய்வந்தவரே

59. புண்கொடுத்தநெஞ்சம் பொருந்துங்குருடனுக்கு
கண்கொடுத்துக்காக்கும் கருணைவடிவானவரே

60. வரத்திற் சிறந்தவருமை படைஞற்காக்
கரத்திற்புனலழைத்த ஆதாங்கர்யா நபியே

61. பதுரமரிலேகி பகைவர்களைவென்று
துதிசெய்துவந்த தோத்திரத்தின்பட்சகரே

62. கல்லாலெறியும் வஞ்சர்கைகளை க்கல்மேல்பிடிக்க
வல்லாண்மைசெய்துமிகமன்னித்தவான்பொருளே

63. பஞ்சகிர்த்தியங்கள் தன்னில்பாருலானநற்கலியா
பஞ்சகிவளக்கத்துதொளுகை பங்கானசக்காத்தும்

64. ஐபாறநோன்புமழகானஹஜ்ஜியிமாம்
மெய்யோன் பறுலும மேலான உத்தமமே

65. மத்திபங்களென்னவெனில் வாசிபுசுன்னத்துகளும்
நித்தச்சதக்காவும் நேர்நபிலும் முஸ்தகபும்

66. வாவிக்கூபந்தடாக வழிநடக்கச்சாலைகளும
ஓவியமாங்காவியங்கள் உணவருந்தச்சத்திரமும்

67. தண்ணீர்ப்பந்தல்களும் தங்குமடம்கட்டிவைத்தோர்
மண்ணின்னுமுள்ளளவு மேலான கீர்த்திபெற்றோர்

68. நல்லாலயதீபம் நந்தவனம் செய்தோர்க்கு
தொல்லுலகிலாயுள்விர்த்தி தோஷமணுகாதே

69. கன்னிகைதானமுதல் சற் வற்த பள்ளிகளும
இன்னிலத்தில் செய்தோருக்கிருப்பிடம்ப பொன்னுலது

70, அத்தமம் ஹறுமுரிச்சலான ஜனலட்டிமுதல்
சித்தமதில் பொய்யும் சிறில் கொலைகளவும்

71, ஓதிவைத்ததேசிகனை ஒன்றாமைநிந்தித்தல்
ஜாதிமுறையில்லாத சண்டாளத்தத்துவங்கள்

72. குண்டுணியுங்கோளுங்குறிப்பாக செய்திடுதல்
வண்டணியுகூந்தலரைவஞ்சித்துவாழ்ந்திடுதல்

73. நெஞ்சாறவஞ்சகங்கள் நேராகச்செய்திடுதல்
கஞ்சாவபினரக்குக்கள்ளு சாராயமுண்ணல்

74. புறம்பேசுதலாகி புறரகசியங்கேட்கல்
பிறர்மனையார்தங்களையே பிரியமாய்ப்பார்ப்பதுவும்

75. இந்தவிதம் நன்மையென்றும் இந்தவிதம் தீமையென்றும்
வக்திம்..ரத்தமக்கம் வாழுமுகம்மதுவே

76, முத்திஒரு வாயிருந்து மூவாப்பொருள் சேர்க்கும்
சித்துருவாய் வந்து ஜெகதலத்தில் தானிருந்து

77. குருசுரூபியாடும் கோமான் திருத்தூதாய்
புருஷ சிம்மமக்க புரா.தமுகம்மதுவே

78. சாமபேததான தண்டஞ்சரியான உருண்பிரனை
மாமதுரவாக்கால் வழிக்கிணங்காவன்குபிரை

79. ஆட்டநிக்ரகஞ்செய்து துன்மார்க்கமில்லாத
இட்டபரிபாலனமுஞ்செய்து வந்தநன்னபியே

80. பண்டிதர்களாயிருந்தும் பாமரர்கள்போலிருப்பார்
தொண்டருருவானசெல்லுதுபகுணசீவன்முத்தர்

81. வேர்வை வந்தால்தான்குளித்து மிகபசித்தாலேபுசித்து
பார்வைக்கு சித்திரைபாய்ப்பாமரரைப்போலிருப்பார்

82. வருவதையும்போவதையும்மனதிலெண்ணுபெரியோர்கள்
குருவா முகம்மதுநன் கொள்கையிலேயேயிருப்பார்

83. நீர்க்குடத்தில் தாதியாகள் நேயம் வைப்பதைப்போலும்
பாசக்குள் விகாரமதில் பக்திமறவார்கள்

84. ஆகலியவகத்தொழில்கள் செய்தாலும்
மோகனகபெண் போலும் முத்திதனிலே யிருப்பார்

(A) நயமான பொன் வெள்ளி நற் செம்பை மண்கல்லை
பயமா மிருகமதை பட்சியை வணங்காமல்

(B) சயரூபமானபரஞ்சோதியைத்தொழுதோரும்
அகமதனிலேயிருந்து ஆதிதனைச்சேர்ந்திடுவர்

(C) சாதுக்களின் குணமே சாகந்த புளியங்கனிபோல்
பூதலத்தினிச்சை பொருந்தாமலே யிருப்பார்

85. முற்குணமே சாத்கேம் போசவழிகொடுக்கும்
நற்குணமே ராஜஸமே நவையில் மெதிச்சக்கும்

86. மதமான தாமஸமே மால்கொள் சித்தவிர்த்தியுடன்
கதமானமாச்சரியம் காமாதி குரோதமுமே

87. லோபமோங்கார டம்பம் லோகமதிலே மறந்து
பாவமதைவிட்டு பரகதிக்கு ஆளாக

88. வாசான சாத்வீக வழியில் நடங்களென்று
ஆகமத்திலுள்ளபடி ஆசாரியர்செய்த ஆக்கினைதனையே

89. ரத்ன மயில்வடிவாய் ரகுமானிடமிருந்து
சுந்தமுடனே வந்துதோன்றுசபுகாரமே

90. நாயக நக்ஷத்திரமாய் நன்மையமதா பிறந்து
தாயகமயூரமதாய் தாரணியில் வந்துதித்து

91, கருடனைக்கண்டாலஞ்சும் கல்லரவக்கைகளுக்கும்
புருடமயிலாக் வந்த பூலோக மன்னயியே

92. மயிலின்குணமே மருவிய சற்குணமே
முகிலினத்தைக்கண்டு முன்னே நின்றாடுதல்போல்

93, குளிருள்மதிகண்டு குமுதமலர்வதுபோல்
வெய்யிலவனைக்கண்டு விரியுமிதழ் பங்கயம்போல்

94. சூரியகாந்தச்சிலையில் சூடாக்கினியாகும்
சூரியனுக்கல்லாது சொல்லுவதுவேறுளதோ

95. சந்திரகாந்தச்சிலையில் தண்ணீர்ஒழுகுவது
சந்திரனுக்கல்லாது தாரைகளுக்குளதோ

96. உத்தமகுணத்தையுடைய உத்தமிகளுமான
பத்தினியர்தங்களுக்கு பர்த்தாவுமாகவென்றே

97. இந்நலத்தில் வந்துதித்தஎல்லாச்சவுந்திரமும்
எந்தலத்திலுங்காணேமென்று சொல்லும்படியாய்

98. பிரபமுள்ள பிவினனை பேராமணம்புரிய
புருஷரத்னமாகப்பிறந்தமுகம்மதுவே

99. புருடவடிவெடுத்தாற்புருடக்குணம்வேண்டும்
புருடரென்றால்யார்க்கு பூவையர்க்கல்லோ புருடாள்

100. வன்மதிலேயிருக்கும்மஹரிபத்திலுள்ளவரும்
மனமதிலேயுள்ளிருக்கும் மாய்கையைநீக்கா திருப்பார்

101. தனக்கையுமேயுள்ளதைபலர்களிடமிருந்தும்
தினமதையகற்றியுமேசித்தந்தெளிந்தேயிருப்பார்

102. சுவையதிலேவசிக்கும்தேரை அண்டக்கருவுட்
டிலேயாதமுதழித்தூட்டிஉறக்காட்டுகின்றேன்

103. அக்கினிப்பைக்குள்ளமைந்த ஆனசிசுவுக்கமுது
சிக்காமலேகொடுக்கும்தேசிகனுரைப்படிக்கு

104. புருடமயிலாடப்பொற்பெடைகள் சூழ்ந்ததுபோல்
புருடலட்சணத்தினரே பூரணஞ்சொல்லால்பணைத்தீர்

105. பதிக்கிசைந்த பத்மினியாய் பாங்காக வந்ததிரு
கதிஜா பிராட்டியார்க்கு கணவராய் வந்தவரே

106. நேயம்பிரியத்தினைவிலேப்போதும்மறவா
ஆயிசாபீவிக்குஅன்புள்ளநாயகமே

107. காத்தூமுடவார்களைத்தான்கதிசேர்க்கும்பீவியெனும்
காத்தூனுசுஹறுமின் கருணையுள்ள தந்தையரே

108. மட்டடங்காகீர்த்திமஹமதரென்றேவுலகில்
ஒட்டகந்தான்பேசுகின்றஉண்மையுள்ளநாயகமே

109. முசலிமானோர்களுக்கு மோக்ஷந்தரும்பீரென்று
முசலிமான் கொண்டேற்றும் முஸ்தபாநன்னபியே

110. ஜெகதீசராயுதித்து ஜெனனித்தோர் தங்களுக்கு
அகமதனிலேயறி வையருளும் தயாநிதியே

111. சலியாமல்மானிடர்கள் சக்ராத்தின் ஹாவில்வந்து
கலிமாப்பயிற்றிவைக்குங்கருணாகரக்கடலே

112. கிராமன் காத்திடன்கணக்கதுவும் நன்மையதாய்
கிராத்தில் முஸ்தஹீம்பாலம் சிராக்கடத்திவைப்பீர்

113. அக்கிவிழியோடதட்டி வருகின்ற யிரு
முங்கர் நக்கீர் மொழிக்குமுகாந்தரமுதவ அருள்வீர்

114. மீசான்திராசுவும் மேன்மைநன்மைபட்டயங்கள்
ஆசாணுக்யிருந்து அருளுர்தயாரிதியே

115, மஹசர்மைதான்மகில் மயங்காமல்மானிடற்கு
எஹ சான்செப்தே அருளும்எங்கள் முஸ்தபாநபியே

116. ஹவுதுல் அமுதமெனும் ஹவுதறின்னீரருந்தி
தவுசுடபபிறதவுஸில் தாக்கல்செய்யும் தாசிமே

117. மானிலத்தில்வந்துதித்து மானிடர்க்கொப்பாய் நடந்து
கோனிடத்தில்போய்ச் சேர்ந்த கொதுபாலநன்னபியே

118. கருவிலுதித்தேதேற்றுங்கடமையிலைவகளெல்லாம்
குருமுகம்மதேபுனைந்திர் கோதில்புவியோர்தமக்காய்

119. தாரைநயன்னீனாம் சகோதரங்கள்புத்ர மித்ரர்
எந்தனுக்குங்கூட இகபரசுகங்கொடுத்து

120. வம்பனுறிபுலீஸ்மாய்கைதனில் சிக்காமல்
செம்பொற்பதந்தருவீர் செப்பதமுஹம்மதுவே

ஞாபுநாயகத்தின் பதிகம்

காப்பு விருத்தம்

முத்தொளிவாய் வந்தமுகம்மதுர சூல்போர் முகையதீன்மேல்
கத்தர்கட்சூழ்புவியில் கவிப்பதிகம்பாடுகற்கருணைபாரும்
சத்துசித்தானந்தமயமாகியேபைம்பூதவுநவாக்கனைத்துவாழும்
அத்துவிதமெய்மப்பொருளாய்ஆகிபரிபூரணனினருள்காப்பாமே

பதிகக்கோச்சக்கலிப்பா

திருவுருவாய்வந்தெழுந்து தீனதர்க்கோர்தம்பமதாய்
அருவுருவேயாகிஅபுசாலித மகவாய்
கருவுருவிலன்ஞோளார் கள்வணங்கைபால் வதைத்தீர்
குருவுருவேஞானக்குருமுகையதீன்துதவே

முள்ளிற்கடங்காவமலன் றிருவருளால்
வள்ளில்வரும் பூதமதைவன் புலியரற்கொன்றோரே
களபமணிப்புயத்தார் கார்த்திமுலம் பியாமரயிர்
குளமதுரசெஞ்சொற் குருமுகையதீன் குதுபே

நாச்சியார் பாத்திமுத்து நன்மகவதாய்த்தோன்றி
பேரய்ச்சிதைந்த கப்பல்தனை பொருந்த வரவழைத்தீர்
வாய்ச்சபிதாமாளம்றுத்துயிரைமக்களுக்காய்க்
கூப்பிசென்றழைத்த குருமுகையதீன்குதுபே

வேதவுருவாகி மிகுதின் விளக்காகி
நீதகன்னிருகையிந்த நீணிலத்திலேயழைத்தீர்
போதமிருப் ஞானம் பொருந்தயெனக்கருள்வீர்
சேர்நில்வாவாப்மை குரு முகையதீன் குதுபே

பந்தர் நகிலார்கள்பாசந்தனையகற்றி
அந்தாய்ந் தொகுத்ததனை அந்திசந்தியேதுதிக்க
வந்தாசரித்து வரமெனக்குத்தந்தருள்வீர்
கொந்தாரலங்கற் குருமுகையதீன் குதுபே.

வாருதிசூழிவ்வுலகில்மாதவமே செய்தறியாச்
சேரன்றனைக் குருவாய்த் தொன்ணுளமைத்தருள்வீர்
ஆரணியத்துற்ற அதிபாதக முனியைக்
கோரமுறவென்ற குருமுகையதீன் குதுபே

நன்றிபெறவெனக்கு ஞானப்பதங்கொடுத்து
துன்றுமிடியைத்துரத்திபாட்கொண்டருள்வீர்
மன்றலுயர்சங்கமணிமாலைவேய்க்கருணைக்
குன்றேமணியே குருமுகையதீன் குதுபே

நான்மறையினாலுரும்ஹரிபத்தின்
மாலெட் டான்பிடமதில் மன்னுமைந்தாமந்திரத்தீர்
சாலோகமேமுதலாய்த்தப்பரமேதந்தருளும்
கோலாகலமே குருமுகையதீன் குதுபே

சந்திரனுமொவ்வாத்தனிமுகமுந்தாரணிந்த
சந்திரிஞ்சேர்பொற்பூபமுபதோன்ற யெதிர்வந்தருள்வீர்
செந்திருவாம் பாத்துமுத்து தேன்மொழியாள் என்ற கருங்
கொந்தளத்தாயீன்ற குருமுகையதின் குதுபே

அய்யபகுதாதரசே சொல்லுமெளியேற்கு
வையகத்திலும்சகல வைபவங்களுந் தழைக்க
செய்யலிவாவுல் ஹம்துஜெயமாநிழல்தருவீர்
கொய்யுமலர்மாலைகுருமுகையதின் குதுபே

வாழி

வல்லரகுமான்வாழி வானவர்களும் வாழி
நல்லநபிமார்வாழி நாவியார்களும் வாழி
சித்தீகாஸிமாரும்வாழி திவ்யயிமாம்கள் வாழி
சுத்தவுலமாவாழி துய்யபொற்காணும் வாழி
சொல்லிஸ்லாமும்வாழி துன்யாவுமே வாழி
நல்லதென்று அச்சியற்ற நாடினவரும் வாழி
கற்றவருங் கேட்டவருங்கண்ணுற்றுப்பார்த்தவருஞ்
சொற்றவருரும்வாழி சுற்றத்தாரும வாழி

சென்னை-600 008